# Centre for Policy Alternatives

24/2, 28th Lane, Off Flower Road, Colombo 7, Sri Lanka
Tel: 94-11-2565304 / 94-11-2565306 / 94-11-5552746, Fax: 94-11-4714460
E-mail: cpa@sri.lanka.net, Website: www.cpalanka.org

## பத்திரிகை அறிவித்தல்

**திரு. லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையை வன்மையாகக் கண்டிக்கும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வேண்டுகின்றது.**

இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் மிலேச்சத்தனமாகவும் கோழைத்தனமாகவும் கொலை செய்யப்பட்டமை மூலம் அனைவருக்கும் நினைவூட்டும் ஓர் உண்மை உண்டு. போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் மூன்று ஆண்டுகள் கடந்து சென்ற போதிலும், **எதிர்மறையான சமாதானத்திற்கு** அல்லது **யுத்தமும் அற்ற சமாதானமும் அற்ற ஓர் நிலைமைக்கு** அப்பால் நாம் செல்லவில்லை என்பதே அவ்வுண்மையாகும். இப்படுகொலையை வன்மையாகக் கண்டிக்கும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், திரு. கதிர்காமர் அவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது. இலங்கையின் ஐக்கியத்திற்காகவும், நியாயமான - ஜனநாயக ரீதியான - நீடித்து நிலைக்கக்கூடிய சமாதானத்திற்காகவும் திரு. கதிர்காமர் மிகக் கடுமையாகப் பாடுபட்டார். எமது நாட்டில் உதித்த தலை சிறந்த வெளிநாட்டு அமைச்சர் என முழு உலகமும் அவரை ஏற்று அங்கீகரித்தது.

இலங்கையில் சமாதானத்தை உருவாக்குவதற்குள்ள தடைகளை நீக்குவது தவிர்க்க முடியாத முதன்மைக்கடமை என்பதை அன்னாரின் படுகொலை மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இற்றைக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கைச்சாத்திட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் ஒரு முழுமையான யுத்தம் நிறுத்தப்பட்டு, இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பேச்சுவார்த்தைகள் இடை நிறுத்தப்பட்டன. மனித உரிமைகள் மற்றும் மனிதப்பாதுகாப்பு என்பன மீது நேரடியாகவே பாதகமான தாக்கம் ஏற்படுத்தப்பட்டு, போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. ஒருபுறம் அரசியல் படுகொலைகள் இடம் பெறுகின்றன. மறுபுறம் சிவில் சமூகத்தினதும் சர்வதேச சமூகத்தினதும் கண்டனங்களைக் கருத்திற்கொள்ளாது சிறுவர்கள் யுத்த சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இந் நடவடிக்கைகள் சமாதான முன்னெடுப்புக்களை பாதகமான முறையில் பாதித்துள்ளதோடு "எதிர்மறை" சமாதானத்திற்குக் கிடைத்த பரந்துபட்ட ஒத்துழைப்பு படிப்படியாக அழிக்கப்பட்டுள்ளது. இத்தகைய படுகொலைகளைப் புலிகள் இறுமாப்புடன் மறுத்தாலும், திரு. லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையைப் பொறுத்தவரை, அது எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாத நடவடிக்கைகளின் அனைத்து நுட்பங்களையும் துல்லியமாக எடுத்துக் காட்டக் கூடியவாறு அமைந்துள்ளமையால், இதற்கான முழுப்பொறுப்பை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். இப்படுகொலை பற்றிய நீதி விசாரணைகளையும் உரிய சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு ஏதுவான முறையில் திட்டவட்டமான சாட்சிகளை முன்வைக்கும் கடமை இலங்கை

அரசாங்கத்தையும் குற்றப்புலனாய்வு அதிகாரிகளையும் சார்ந்தது. அதே சமயம் இக்கொடுமையான குற்றச் செயலை செய்தோரையும் நுட்பமான முறையில் அதற்கான சதித்திட்டங்களைத் தீட்டியோரையும் கைது செய்து குற்றங்களை மெய்ப்பிப்பது அரசின் பொறுப்பாகும். விடுதலைப்புலிகள் சமாதான முன்னெடுப்புகளின் ஒரு பங்குதாரர் என்பது குற்றப்புலனாய்வு நடவடிக்கைகளுக்கோ நீதித்துறை நடவடிக்கைகளுக்கோ எவ்வகையிலும் தடையாக இருக்கக் கூடாது. அதே சமயம் விடுதலைப் புலிகள் கூறுவதற்கு அமைய அவர்கள் இக்குற்றத்திற்குப் பொறுப்பில்லையெனின் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்குமாறு அரச அதிகாரிகளுக்குச் சவால்விடுப்பதைத் தவிர்த்து புலனாய்வு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேற்கூறிய விடயங்களுக்கு மேலதிகமாக, இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் மற்றுமொரு முக்கிய பொறுப்பு உண்டு. கொள்கைகளின் அடிப்படையில் கலந்துரையாடி வெளிப்படையாக நுண்ணாய்வுக்குட்படுத்தக்கூடியதும் நீடித்து நிலைத்து நிற்கக் கூடியதுமான சமாதான முன்னெடுப்புக்களில் ஈடுபடுவதே இப்பொறுப்பாகும்.

அரசின் இறைமை, எல்.ரீ.ரீ.ஈ அமைப்பின் சட்ட பூர்வமான தன்மை மற்றும் தமிழ் அரசு ஆகியவை தொடர்பான தேடலில் ஈடுபட்டுள்ளமை காரணமாக, கூட்டாக அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளுதல், சுயாட்சி, ஜனநாயகம், மனித உரிமைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படைத் தன்மையுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு இனப்பிரச்சினைக்கு நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வைத் தேடிச் செல்லும் தீர்க்கமான முயற்சி கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக மரபு யுத்தம் நிறுத்தப்படும் கட்டத்திற்கு அப்பால் சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. அதே சமயம் மனித உரிமைகள் மனிதப்பாதுகாப்பு என்பவற்றைப் பேணிக்காக்க முடியாத வகையில் எது வித குற்றத்திற்கும் ஆளாகாமல் அவை மீறப்படுகின்றன. அவசர மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இடைக்கால கட்டமைப்புக்களைத் தேடும் நிலைமைகளுக்கு அப்பால் சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவும் இல்லை, அதே சமயம் மோதலின் அடிப்படைக் காரணிகளை ஆய்வு செய்து பரிகாரம் காணப்படவும் இல்லை. எனவே சமாதான நடவடிக்கைகளில் பலகுறைபாடுகள் உள்ளன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஆகையால், இலங்கை அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் நாட்டின் ஏனைய சட்டமுறைசார் அமைப்புக்களுடனும் கலந்தாலோசித்துப் புதிய திட்டம் ஒன்றை உருவாக்குமாறு நாம் நோர்வே அரசாங்கத்தைக் கோருகின்றோம்.

இது தொடர்பாக போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பங்காளர்கள் ஒன்றுகூடி மீளாய்வு செய்வதற்கான சந்தர்ப்பம் உண்டென எதிர்பார்க்கின்றோம். எவ்வாறாயினும் சமாதான முன்னெடுப்புக்களின் அடிப்படையில் மீளாய்வு செய்து அதனை புதிதாகச் சீர்செய்வது இன்றியமையாதது.

இடைக்கால மற்றும் தற்காலிக நடவடிக்கைகள் மீது நம்பிக்கை வைப்பதைவிட சமாதான முன்னெடுப்புக்களை இறுதிவரை முன்னெடுத்துச் செல்வதற்கு உறுதியான கொள்கைகளின் அடிப்படையில் கலந்துரையாட வேண்டியதன் அவசியத்தைக் கருத்திற்கொள்ள வேண்டும். இதனை உறுதிப்படுத்தும் பொறுப்பும் கடமையும் கலந்துரையாடலின் நேரடிக்கூட்டுப் பங்காளர்களாகிய இலங்கை அரசாங்கம், விடுதலைப்புலிகள், நோர்வே அரசு மாத்திரமல்லாது இலங்கையின் சகல அரசியல் துறையினரையும் சிவில் சமூக அமைப்புக்களையும் சாரும். சமாதான

முன்னெடுப்புக்கள் சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளமையால் சர்வதேச சமூகத்திற்கும் பாரிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. தேவைப்படின் தடுப்பு நடவடிக்கைகள் உட்பட மேற்படி நடவடிக்கைகளுக்குத் தேவையான பூரண ஒத்துழைப்பையும் சர்வதேச சமூகம் வழங்க வேண்டும். ஒஸ்லோ மற்றும் ரோக்கியோ பிரகடனங்களையும் சமாதான முன்னெடுப்புக்களுக்கு ஏற்றவகையில் பயன்படுத்த முடியும் என நாம் நம்புகின்றோம்.

ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும், நியாயத்தையும், அடிப்படையாகக்கொண்டு சகலருக்கும் சமாதானத்தை நிலைநாட்டுவதற்குத் தனது இன்னுயிரைத் தியாகம் செய்த லக்ஷ்மன் கதிர்காமர் போன்ற அனைவரது சார்பாகவும் நாம் செய்யக் கூடிய குறைந்தபட்சக் கடமை இதுவாகும்.

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து
நிறைவேற்றுப் பணிப்பாளர்
(மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையப் பணிப்பாளர் சபையின் சார்பில்)

24.08.2005